بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/11/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் அபூ துஜானா சிமாக் பின் கரஷா (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔ بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝

இன்று பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றி எடுத்துரைக்கப்படும். **ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டு வந்தது.**

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ‘உஹது போர் நாளன்று எனது தந்தையின் உடல் சிதைக்கப்பட்ட நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டது. அதாவது, உடல் உறுப்புகள் வெட்டப்பட்டிருந்தன. குறிப்பாக காதும், மூக்கும் வெட்டப்பட்டிருந்தன. அன்னாரது உடல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வைக்கப்பட்டது. நான் அவருடைய முகத்திலிருந்து துணியை எடுக்க முனைந்தேன். மக்கள் என்னைத் தடுத்தனர். அப்பொழுது ஒரு பெண் ஓலமிடும் சப்தத்தை மக்கள் கேட்டனர். அது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்களின் மகள் ஃபாத்திமா பின்த் அம்ர் ஆவார் என்று ஒருவர் கூறினார்.’ அந்தப் பெண் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்களின் சகோதரி ஆவார் என்றும் கூறப்படுகிறது. ‘அழ வேண்டாம்! வானவர்கள் தொடர்ச்சியாக அவர் மீது தனது இறக்கைகளைக் கொண்டு நிழல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்’ என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையைப் பற்றி பல்வேறு விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன. புகாரியுடைய ரிவாயத்தில் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: அவர்கள் நீராட்டப்படவுமில்லை; அவர்களின் ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை.

புகாரியுடைய இன்னொரு அறிவிப்பில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸாவை தொழ வைத்தார்கள் என்று வருகிறது.

புகாரியுடைய இன்னொரு அறிவிப்பில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையை உஹது போருக்கு எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தொழ வைத்தார்கள் என்று வந்துள்ளது.

இப்னு மாஜாவில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னார் (ஸல்) அவர்கள், பத்து, பத்து ஷஹீதுகளின் ஜனாஸாக்களாக தொழ வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் ஜனாஸா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருகிலேயே வைக்கப்பட்டிருந்தது; மற்ற ஷஹீதுகளின் ஜனாஸாக்கள் (தொழுகைக்குப் பிறகு) கொண்டு செல்லப்பட்டன.

அபூ தாவூதில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஷஹீதுகள்) அவர்களது இரத்தத்துடன், அதாவது காயத்துடன் அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களில் எவருடைய ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை.

சீரத் காத்தமுன் நபிய்யீன் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமது சாஹிப் எழுதுகிறார்கள்:

‘அப்பொழுது ஜனாஸா தொழுகை தொழ வைக்கப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது மரணத்திற்கு சற்று முன், குறிப்பாக உஹது ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.’

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது போர் கழிந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் நான் எனது தந்தைக்காக கபர் அமைத்தேன். அவர்களை அதில் அடக்கம் செய்தேன். அப்போது நான் அவர்களுடைய உடலில் எந்த மாற்றத்தையும் காணவில்லை.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை சந்தித்த போது, ஜாபிரே! நீங்கள் துன்பத்தில் இருப்பதாக நான் காண்கிறேன். என்ன விஷயம்? என்று கேட்டார்கள். நான் அன்னாரிடம், எனது தந்தை உஹது போரில் ஷஹீதாகி விட்டார்கள். அவர் கடனையும், சந்ததிகளையும் விட்டுச் சென்றுள்ளார் என்று கூறினேன். **அல்லாஹ் உனது தந்தையை சந்தித்த நற்செய்தியைப் பற்றி உமக்கு நான் கூறட்டுமா? என்று அன்னார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கூறுங்கள் என்று நான் பதிலளித்தேன். அல்லாஹ் திரைக்குப் பின்னால் அன்றி எவரிடமும் பேசியதில்லை. ஆனால் அல்லாஹ் உனது தந்தையை உயிர் பெறச் செய்த பிறகு அவருக்கு முன்னால் நின்று அவருடன் உரையாடினான். அவரிடம், என்னுடைய அடியானே! என்னிடம் கேள்; நான் தருகிறேன் என்றான். உனது தந்தை, என் இறைவா! என்னை மீண்டும் உயிர்த்தெழச் செய்; நான் உனது வழியில் மீண்டும் கொல்லப்பட வேண்டும் என்றார். அப்போது இறைவன், எவர் ஒரு முறை இறந்து விட்டாரோ அவர் மீண்டும் உலகிற்கு திரும்ப அனுப்பப்பட மாட்டார் என நான் தீர்மானித்து விட்டேன் என்று கூறினான்.** ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் அல்லாஹ்விடத்தில், என் இறைவா! எனக்கு பின்னால் இருக்கக்கூடியவர்களிடம் இவ்விஷயத்தை கூறிவிடு என்று இறைஞ்சினார். அப்போது இறைவன் இந்த வசனத்தை இறக்கினான்;

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ؕ بَلْ اَحْيَآءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ

‘அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம்; மாறாக அவர்கள் உயிரோடு உள்ளனர். அவர்களுக்கு அவர்களின் இறைவனிடத்தில் உணவு வழங்கப்பட்டு வருகிறது.’ **(3:170)**

**அடுத்ததாக எடுத்துரைக்கப் போகும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ துஜானா ஆகும்.** ஹஸ்ரத் அபூ துஜானா அன்ஸாரின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான பனூ ஸாயிதாவைச் சேர்ந்தவர் ஆவார்.

**ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் பத்ர், உஹது மற்றும் அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா அன்ஸாரின் பெரும் சஹாபாக்களுள் ஒருவராக கருதப்படுகிறார்கள்.** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்களில் இவருக்கு பெரும் அந்தஸ்து கிடைத்திருந்தது. போர் நடைபெறும் போது ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் மிகவும் வீரத்தை வெளிப்படுத்துவார்கள். அன்னார் மிகச் சிறந்த குதிரை வீரராக இருந்தார்கள். அவரிடம் சிவப்பு நிறத்திலான ஒரு கைக்குட்டை இருந்தது. போரின் போது மட்டுமே

அதை அவர்கள் தலையில் கட்டிக் கொள்வார்கள். அவர் சிவப்பு கைக்குட்டையை தலையில் அணிந்து கொள்ளும் போது, அவர் போருக்காக ஆயத்தமாகி விட்டார் என மக்கள் அறிந்து கொள்வர். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் வீரமும் துணிவும் மிக்க வீரர்களுள் ஒருவராக கருதப்படுகிறார்கள்.

முஹம்மது பின் இப்ராஹீம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் போரில் தனது சிவப்பு தலைப்பாகையின் காரணமாக அடையாளம் காணப்பட்டார்கள். பத்ர் போரிலும் அது அவர்களின் தலையில் இருந்தது. மேலும் முஹம்மது பின் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் உஹது போரிலும் அவ்வாறே கலந்து கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் உறுதியாக நின்றார்கள். மேலும், மரணத்திற்கு ஆயத்தமாக இருப்பதாக அன்னாருடன் பிரமாணம் செய்திருந்தார்கள். உஹது போர் நாளன்று ஹஸ்ரத் அபூ துஜானா மற்றும் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் ஆகியோர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாக பாதுகாத்தார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் கடுமையாக காயமடைந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அந்நாளில் ஷஹீதாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உஹது நாளில் ஒரு வாளைப் பிடித்தவாறு, مَن يَأْخُذ مِنِّي هذا؟ இதை என்னிடமிருந்து யார் வாங்குவார்கள்? என்று கேட்டார்கள். வாங்குவதற்காக எல்லோரும் கை நீட்டினார்கள். நான் வாங்கிக் கொள்கிறேன் என்று அவர்களில் ஒவ்வொருவரும் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், فمَن يَأْخُذُهُ بحَقِّهِ؟ இதனுடைய உரிமையை கொடுத்து யார் இதை வாங்குவார்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அனஸ் அவர்கள் கூறுகிறார்கள்: அப்போது மக்கள் தயங்கி நின்றார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள், நான் அதை அதனுடைய உரிமையை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன் என்று கூறினார்கள். அவர்கள் வாளை வாங்கினார்கள்; மேலும் இணைவைப்போரின் தலைகளை வெட்டி வீழ்த்தினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள், இந்த வாளுக்குரிய உரிமை என்ன? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இதைக் கொண்டு எந்த முஸ்லிமையும் கொல்லக் கூடாது; எந்தவொரு காஃபிரையும் எதிர்கொண்டு நிற்கும் போது ஓடி விடக் கூடாது என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள், நான் இந்த வாளின் உரிமையை நிறைவேற்றுபவனாக வாங்கிக் கொள்கிறேன் என்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ துஜானா அவர்களுக்கு வாளைக் கொடுத்த போது, அதைக் கொண்டு அவர்கள் இணைவைப்போரின் தலையை வெட்டி வீழ்த்தினார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகிறார்கள்: உஹது போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு வாளை ஏந்தியவாறு, எவர் இந்த வாளுக்குரிய உரிமையை கொடுப்பதாக வாக்குறுதி அளிப்பாரோ அவருக்கு இந்த வாளை நான் கொடுப்பேன் எனக் கூறினார்கள். பலர் அந்த வாளை வாங்க எழுந்து நின்றனர். அன்னார் (ஸல்) அவர்கள் அந்த வாளை அபூ துஜானா அன்ஸாரிக்கு வழங்கினார்கள். போரில் ஒரு சந்தர்ப்பத்தில் மக்காவாசிகளின் படை வீரர்கள், அபூ துஜானாவின் மீது தாக்குதல் தொடுத்தனர். ஒரு படைவீரன் மிகத்தீவிரமாக போரில் பங்கெடுப்பதை அன்னார் கண்டார்கள். வாளை உயர்த்தியவாறு அவன் பக்கம் பாய்ந்தார்கள். ஆனால் பிறகு அவனை ஒன்றும் செய்யாமல் திரும்பி விட்டார்கள். அவனை நீங்கள் ஏன் விட்டீர்கள்? என அவரிடம் ஒரு நண்பர் கேட்டார். அன்னார் கூறினார்கள்: நான் அவனிடம் சென்றபோது அவனது நாவிலிருந்து எவ்வாறான சொற்றொடர் வெளிப்பட்டது என்றால் அதைக் கேட்ட போது, அது ஆண் அல்ல; பெண் என்பதை நான் உணர்ந்து

கொண்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட வாளைக் கொண்டு ஒரு பலவீனமான பெண்ணை வீசுவதை எனது உள்ளம் பொறுத்துக் கொள்ள இயலாது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: சுருக்கமாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெண்களுக்குரிய மரியாதை மற்றும் கண்ணியம் குறித்து எப்போதும் போதித்து வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக காஃபிர்களின் பெண்கள் அதிக துணிவோடு முஸ்லிம்களுக்கு நஷ்டமிழைக்க முயற்சி செய்து வந்துள்ளனர். அப்படியிருந்தும் கூட முஸ்லிம்கள் அவ்விஷயங்களை பொறுத்துக் கொண்டு வந்துள்ளனர்.**

ஸைது பின் அஸ்லம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: **அபூ துஜானா அவர்கள் உடல்நலமின்றி இருந்த போது மக்கள் அவரிடத்தில் வந்தார்கள். ஆனால் அன்னாரின் முகம் மிகப் பொலிவுடன் இருந்தது. உங்களுடைய முகம் ஏன் பொலிவாக உள்ளது? என்று ஒருவர் கேட்டார். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள், என்னைப் பொறுத்தவரை என்னுடைய செயல்களுள் இரண்டு செயல்கள் மிக கனமானதாகவும், உறுதியானதாகவும் உள்ளன. ஒன்று, என்னுடன் சம்பந்தமில்லாத பேச்சை நான் ஒருபோதும் பேசியது கிடையாது. இரண்டாவது, எனது உள்ளம் முஸ்லிம்களுக்காக எப்பொழுதும் தூய்மையானதாக உள்ளது என்றார்கள்.**

**ஹஸ்ரத் அபூ துஜானா அவர்கள் யமாமா போரில் ஷஹீதானார்கள்.**

பொய்யன் முஸைலமா என்பவன் பொய் நபித்துவ வாதம் செய்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மதீனாவின் மீது படையெடுக்க விரும்பினான். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவனை ஒடுக்குவதற்காக ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டில் படையை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா அவர்களும் அப்படையில் பங்கெடுத்தார்கள். அவர்கள் யமாமா போரில் கடுமையாகப் போரிட்டார்கள். ஷஹாதத் எனும் அந்தஸ்தை அடைந்தார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ஒரு ஷஹீதைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். அவர் செய்யது ஜலால் சாஹிபின் மகனாகிய பிஷாவர் மாவட்டத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய மஹ்பூப் கான் சாஹிப் ஆவார்கள். அஹ்மதிய்யத்தின் எதிரிகள், 8 நவம்பர் 2020 அன்று காலை 8 மணிக்கு பிஷாவரில் ஷேக் முஹம்மது கிராமத்தில் துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.*

*இவ்வாறே, பாகிஸ்தானுடைய முரப்பி மதிப்பிற்குரிய ஃபக்ர் அஹ்மது ஃபரக் சாஹிப் மற்றும் அவருடைய மகன் இக்திஷாம் அப்துல்லாஹ் (வக்ஃபே நவ்) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். 2020 நவம்பர் 1 ஆம் தேதி ஒரு சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.*

*மேலும், ரப்வாவைச் சார்ந்த மியான் அப்துல் லதீஃப் சாஹிபின் மகன் மதிப்பிற்குரிய டாக்டர் அப்துல் கரீம் சாஹிப் அவர்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். செப்டம்பர் 14 ஆம் தேதி 92 வயதில் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.*

*ஹுஸூர் அவர்கள் இந்த மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு, அல்லாஹ் இவர்களின் அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும், இவர்களின் உறவினர்களுக்கும் இவர்களின் நன்மைகளை தொடரக்கூடிய நல்வாய்ப்பு கிடைப்பதற்காகவும் துஆ செய்தார்கள். ஜுமுஆ தொழுகைக்கு பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

*(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)*